## வெலிவிடிய திவிதுர பிரதேச சபை
## காலி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 அக்தோபர் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 154,799 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியில் ரூபா 93,119 இற்கான தொகையொன்று வருட இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது பூர்த்தி செய்திருந்த 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 4,018,638 தொகையினைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2006 ஏப்ரல் 15 திகதியில் உள்ளவாறு முன்னர் பூர்த்தி செய்திருந்த ரூபா 84,643 இற்கான 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக கோவையொன்று அல்லது வேறு தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| | (i) | விதி 33 | ஏக்கர் வரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணைகள் தயாரித்திருக்கவில்லை. |
| | (ii) | விதி 59 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத் தொழில்கள் பற்றிய அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமானங்கள் 110 | | சேதங்கள் தொடர்பாக பதிவேடான்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,778,929 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,487,077 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,291,852 இற்கான வளர்ச்சி ஒன்றை காட்டியது. இந்த வளர்ச்சிக்கு 05 வருமான விடயங்களில் ரூபா 3,370,467 இற்கான அதிகரிப்பு மற்றும் 04 செலவு விடயங்களில் ரூபா 607,279 இற்கான குறைதலும் முக்கியமாக பாதித்திருந்தது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களில் திருப்திகரமான நிலைமை ஒன்றினை காட்டிய போதிலும், கடன்பட்டோர் மீதியில் அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 12,715,645 இற்கான மீதியொன்று மற்றும் தீர்த்தல் விடயம் தாமதிக்கப்பட்டு காணப்படும் ரூபா 4,018,638 இற்கான கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்டமையால் அந்த விகிதாசாரங்களின் மூலம் காட்டப்படடுள்ள விதமாக திரவத்தன்மையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 ஏக்கர் வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 175,872 தொகைக்கான ஏக்கர் வரி தொகையில் வருட இறுதி அளவில் ரூபா 104,596 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்றினை தயாரித்து செயற்படுத்தி இருக்கவில்லை.

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 20,495,938 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 87,500 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது ரூபா 1,416,700 இற்கான வாடகை வருமானம் ஒன்று மற்றும் ரூபா 615,500 இற்கான எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண வருமானம் ஒன்றினை உழைத்தல் எதிர்பார்த்திருந்த போதிலும், ஆண்டின் போது உழைத்திருந்தது முறையே ரூபா 556,420 தொகை மற்றும் ரூபா 120,203 இற்கான வருமானம் ஒன்று மாத்திரம்.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பதவியணித் திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் 02 மிகைப் பதவியினை முறைப்படுத்தி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

(ஆ) சபைக்குச் சொந்தமான 02 வங்கி நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் போது எல்லா மாதங்களிலும் ரூபா 3,386,833 தொகைக்கான மாதாந்த சராசரி மீதியொன்று காணப்பட்ட போதிலும், அந்த மிகைப் பணத்தினை முதலீடு செய்து வட்டி வருமானம் உழைப்பது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு திறமையின்மை

**வீதி விளக்குகளுக்கான பணத்தை மீளளிப்பு செய்து கொள்ளாமை**

2010 ஆகஸ்ட் 17 திகதி PE/01/01 ஆம் இலக்க மின்சாரம் மற்றும் வலு அமைச்சினை வழங்கியிருந்த சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தமையால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 176,490 தொகை செலவினை மீளளிப்பு செய்வதற்கு முடியாதிருந்தது.

### 3.4 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

2015 ஜுலை 10 திகதி 02/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு LE-7470 இலக்கம் கொண்ட லாண்ட் குருஷர் வாகனம் மற்றும் மின்பிறப்பாக்கி என்பவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் சபை வளவில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது.

### 3.5 திண்ம கழிவு பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகார பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் மாத்திரம் குப்பைகள் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதுடன், முறையான நடைமுறையொன்று இன்றி குப்பைகள் அகற்றபடுவதினால் அப் பிரதேசத்தில் நுளம்புகள் மற்றும் கொசுக்கல் நெருக்கடி அதிகரித்திருந்தது.

(ஆ) மிகவும் சரிவான காணி ஒன்றில் குப்பைகள் கொட்டப்படுவதுடன், இந்த காணிக்கு நுழைவது கடினமாததனால் நுழைபாதைக்கு அண்மித்து குப்பைகள் குவிக்கப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 93 மற்றும் 94 பிரிவுகளின் பிரகாரம் குப்பைகளை அகற்றுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உட்படுத்தப்பட்டுள்ள 05 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களில் கூட்டுத்தொகை ரூபா 8,594,539 தொகையாகக் காணப்பட்டதுடன், மேலும் 02 வருமான விடயங்களில் அனுகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 561,573 தொகை காணப்பட்டது. இதன் காரணமாக ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்துதல்

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் | | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த அட்டவணைகளுடன் சபையினால் பேணப்பட்டிருந்த பதிவேடுகள் இணங்கி யிருக்கவில்லை. |
| | | (ii) | சேதங்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட வில்லை. |
| (ஆ) | வாகன நிருவாகம் | (i) | வாகனப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | செயற்படாத வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து, செயற்படுத்தி யிருக்கவில்லை. |
| | | (ii) | முத்திரைக் கட்டண வருமானத்தை இற்றைவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | புதிய வருமானங்களை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| | | (iv) | அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களை வர்த்தமானியில் பிரிசுரித்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | செலவு விடயமொன்றில் முழு ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டுள்ளன. |
| | | (ii) | வேறு செலவு விடயமொன்றில் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையினை மிகைத்து செலவிடப்பட்டுள்ளது. |
| | | (iii) | 05 செலவு விடயங்களில் வருமான இலக்குகளை நெருங்கியிருக்கவில்லை. |
| | | (iv) | வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக தொடர்செயல் நடவடிக்கை மேற்கொண்டு, பாதீட்டை திருத்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (உ) | பெற வேண்டிய கணக்குகள் | | நீண்ட காலமாக காணப்படும் பெற வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |